செ.வெ.எண். 1115

நாள்: 19.12.2010

**செய்தி வெளியீடு:**

பூந்தமல்லி அரசு தொழிற்பயிற்சி மையத்தில் புத்தகம் கட்டும் பயிற்சி முடித்து வேலை கிடைக்காமல் இருந்த 38 மாற்றுத்திறனாளிகள் அரசு வேலைவாய்ப்புக் கோரி உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டதை முன்னிட்டு இவர்களது கோரிக்கை கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு விரைவில் உரிய ஆணைகள் வழங்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து 33 பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் இளநிலை புத்தகம் கட்டுநர் பதவியில் பணியமர்த்த, அனைத்து விதிகளையும் தளர்வு செய்து அரசின் ஆணை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 33 பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு, இளநிலை புத்தகம் கட்டுநர் பதவிக்கான பணிநியமன ஆணையை **மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர்** அவர்கள் 19.12.2010 அன்று வழங்கி, வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மேலும், கருணை அடிப்படையில் "சி" மற்றும் "டி" பிரிவின் கீழ் 18 வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளை **மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர்** அவர்கள் 19.12.2010 அன்று வழங்கி, வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

கடந்த 2006ம் ஆண்டு டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் வெகு நாட்களாக காலியாக இருந்த அமைச்சு மற்றும் தொழில்நுட்ப பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்படி அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 30 பணியிடங்கள், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் 112 பணியிடங்கள் மற்றும் கருணை அடிப்படையில் 41 பணியிடங்கள் என ஆக மொத்தம் 183 பணியிடங்கள் இதுவரை நிரப்பப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக செய்தித் துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி, தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு. ரா. சிவகுமார், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலாளர் திரு. எஸ்.எஸ்.ஜவஹர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர் திரு. து. விவேகானந்தன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இயக்குநர்,
எழுதுபொருள் (ம) அச்சுத்துறை,
சென்னை-2.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.